**பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை -2024**

---

பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்காக செயற்பாட்டு அலுவல்கள் தொடர்பான, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பிரிவு 13(1) மற்றும் 2018 இன் 32 ஆம் இலக்க பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை மீதான சட்டத்தின் பிரிவு 22 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் அடங்கியுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிச குடியசரின் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமான்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என நான் கருதுகின்ற அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்பான எனது கருத்துக்களும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.1 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயற்பாட்டுக் கைநூலின் பந்தி இலக்கம் 6.6 இன் படி கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2021 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 1315 நாட்கள் தாமதத்து, 2025 ஒக்தோபர் 07 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2022, 2023 மற்றும் 2024 ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கைகள் 2025 ஒக்தோபர் 27 திகதி அளவிலும், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | இணங்குகின்றேன். ஆதிகாரசபைக்காக நிரந்தர கணக்காளர் ஒருவர் அல்லது உதவிப் பதவியணியில் காணப்படாமையால் இந்தத் தாமதம் ஏற்பட்டிருந்தது. 2024 ஆண்டின் செப்தம்பர் முதல் 2025 ஜுன் வரை அதிகாரசபைக்காக பணிப்பாளர் சபை நியமனம் செய்யப்பட்டிருக்காத காரணத்தினால் 2021 நிதிக்கூற்றுக்களுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் 2025.08.29 திகதி கிடைத்திருந்தது. 2021 ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2025 ஒக்தோபர் 03 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2022 | சுற்றறிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட நாட்களில் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

நிதிக்கூற்றுக்களுக்கு 2025.09.30 திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது.

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 32 ஆம் இலக்க பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை மீதான சட்டம் | | | |
| (i) பந்தி 20(i) | அதிகாரசபைக்கு அதனது நிதியமொன்று காணப்பட வேண்டிய போதிலும், 2025 ஒக்தோபர் 07 திகதி அளவிலும் அதிகாரசபைக்கான நிதியம் ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. | ஏற்றக்கொள்கின்றேன். ஏதிர் காலத்தில் பணிப்பாளர் சபையை அறிவுறுத்தி அரச நிதித் திணைக்களத்தின் மூலம் அறிவுரை பெற்றுக்கொண்டு நிதியமொன்று நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபைக்காக நிதியமொன்று நிறுவுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) பந்திகள் 22 (2) மற்றும் (3) | முறைப்படியான கணக்கேடுகள் பேணிச் செல்லல் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன், கணக்கீடு தொடர்பாக முறையான கவனத்துடன் முற்பணப் பதிவேடுகள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரித்தல் மேற்கொள்ளப்படவில்லை. | அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை 2020 திசெம்பர் அளவில் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், தேவையான பதவியணியினரை ஆட்சேரப்பதற்கு சந்தர்பபம் வழங்கப்படவில்லை. 2023 ஆண்டு பெற்றுக்கொண்ட விசேட அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் 2024 ஆண்டு முதல் கணக்காளர் ஒருவர் நிரந்தர அடிப்படையில் சேர்க்கப்பட்டு முறைப் பிரகாரம் ஆவணப்படுத்துதல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது முற்பணப் பதிவேடுகள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் உரிய முறையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முற்பணப் பதிவேடுகள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் உரிய முறையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணங்கள் | | | |
| | (i) நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | பதவியணி உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் நிமித்த துணைக்கட்டுநிதி வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், பதவிநிலை அல்லாத உத்தியோத்தர் ஒருவருக்கு 2024 பெப்ரவரி 06 திகதி முதல் மே 14 திகதி வரையான காலப் பகுதியினுள் 06 சந்தர்ப்பங்களில் ரூபா 364,000 இற்கான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். பதவியணி உத்தியோகத்தருக்காக மாத்திரம் நிமித்த துணைக் கட்டுநிதி வழங்க முடிமான அனைத்துச் சந்தரப்பங்களிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறாயினும் அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திக் கருமங்களுக்காக சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் ஒரு பதவியணி உத்தியோகத்தர் ஊடாக பெற்றுக்கொள்ளும் முற்பணத் தொகை போதியளவாக காணப்படாத சந்தர்ப்பத்தில் அதிகாரசபையின் பதவியணி உத்தியோகத்தர்கள் காணப்படாமையால், பதவியணி அல்லாத நிரந்தர நியமனம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறான முற்பணங்கள் பெற்றுக்கொள்வதற்காக விசேட அங்கீகாரமொன்று வழங்கப்பட்டுள்ளது. தற்போது 05 பதவிநிலை உத்தியோகத்தர்கள் (03 பதில் கடமை, 02 நிரந்தர) அதிகாரசபையில் காணப்படுவதனால் அவ்வாறான சிக்கலொன்று ஏற்படமாட்டாது. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| | (ii) நிதிப் பிரமாணம் 371(5) | துணைக் கட்டுநிதி பெற்றுக்கொண்ட பின்னர் குறிப்பிட்ட கருமம் பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2024 ஆண்டு | இணங்குகின்றேன். குறிப்பிட்ட கால வரையறையினுள் அதிகாரசபையினால் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுடன் இணைந்து நுவரெலியா, | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெப்ரவரி முதல் ஏப்ரல் வரை 04 உத்தியோகத்தர்களினால் 08 சந்தர்ப்பங்களில் பெற்றிருந்த ரூபா 702,000 முற்பணத் தொகை குறிப்பிட்ட கருமம் பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் தீர்த்திருக்கவில்லை. | கண்டி, மாத்தளை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் காணி உறுதிகளை தயாரிக்கும் விரைவான வேலைத் திட்டத்தின் கீழ் தொடர்ச்சியாக பல நாட்கள் (03 நாட்கள் முதல் 05 நாட்கள் வரை) பல இடங்களில் உறுதிகள் தயாரிக்கும் ஆரம்ப அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டது. முற்பணத் தொகையை செலவிடல் அந்த உத்தியோகத்தர் குழுவினால் மேற்கொள்ளப்பட்டமையால், 10 நாட்களுக்குள் பில் பத்திரங்களை தீர்ப்பதற்காக குறிப்பிட்ட பில் பத்திரங்களை பெற்றுக்கொள்வதில் செய்முறைசார் சிரமங்கள் காணப்பட்டமையால் இந்த தாமதம் ஏற்பட்டது. இது உண்மையாகவே, இந்த கருமத்தை நிறைவேற்றுவதில் காணப்பட்ட சிக்கலான தன்மையினால் ஏற்பட்டதாகும். | |
| (இ) அரச பெறுகை வழிகாட்டல் கோவை | | | |
| (i) பந்தி 4.2.1 | அதிகாரசபையினால் குறைந்தளவு மூன்று வருட காலத்திற்காக எதிர்பார்த்த பெறுகை அலுவல்கள் அடங்கிய பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 – 2024 ஆண்டுகளுக்காக அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். தற்போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் படி பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) பந்தி 4.2.2 (ஆ) | பெறுகை நேரசூசியொன்று தயாரிக்கப்பட்டு முறையான முகாமைத்துவமொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான பெறுகை நேரசூசியொன்று அதிகாரசபையினால் 2022 – | ஏற்றுக்கொள்கின்றேன். தற்போது தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | பெறுகை நேரசூசி தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2024 ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) பந்தி 4.3.1 | 2022, 2023 மற்றும் 2024 ஆண்டுகளுக்காக மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் 32 ஆம் இலக்க பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 35 இன் பிரகாரம் அதிகாரசபை கூட்டங்கள் மற்றும் அந்த கூட்டங்களில் கடைபிடிக்கப்பட வேண்டிய செயற்படு முறைமை மற்றும் அதிகாரசபையின் அலுவல்களை முகாமைத்துவம் செய்தல் தொடர்பான ஏதேனும், வேறு காரணங்களுக்காக விதிகள் தயாரிப்பதற்கு அதிகாரசபையின் முகாமைத்துவச் சபைக்கு இயலுமை காணப்பட்ட போதிலும், அவ்வாறான விதிகள் தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ளவாற அதிகாரசபைக்காக விசேடத்துவ விதிகள் தயாரிப்பதற்கான விசேட தேவைப்பாடுகள் இதுவரை ஏற்படவில்லை எனவும், இதுவரை விசேட விதிகள் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியின் மூலம் வெளியிடப்படவில்லை. அவ்வாறாயினும், பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்துவது பூர்வாங்க இணக்கப்பாட்டின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட சம்பிரதாயங்களின் மீது மேற்கொள்ளப்படுகின்றது. பணிப்பாளர் சபையை அறிவுறுத்தி அந்த அறிவுரைகளின் படி எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபையின் அலுவல்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் தொடர்புடைய வேறு ஏதேனும் காரணங்களுக்காக விதிகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில்முயற்சிச் சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரச தொழில் முயற்சிகளில் தாபன ரீதியான நிறுவாகத்திற்கான வழிகாட்டலின் 2.2.2(a)(ii) படி குறைந்தளவு ஒரு மாதத்திற்கு ஒருமுறை சட்டத்தின் செய்முறையின் படி பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2024 ஆண்டில் 06 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். 2024 செப்தம்பர் மாதம் முதல் பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டிருந்தது. புதிய பணிப்பாளர் சபை 2025 ஜூன் மாதம் நியமனம் செய்யப்பட்டுள்ளது. 2024 இற்கான பணிப்பாளர் சபை 08 மாதங்களே கணப்பட்டதுடன், இந்த காலப் பகுதியில் பணிப்பாளர் சபையின் 06 கூட்டங்கள் நடாத்தப்பட்டது. | சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டலின் பிரகாரம் குறைந்தளவு ஒரு மாதத்திற்கு ஒருமுறை பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் போது மேற்கொண்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 14,380,622 தொகைக்கான மொத்தச் செலவில் அதிகாரசபைக்கு சாட்டப்பட்டிருந்த கருமங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது ரூபா 1,437,126 இற்கான செலவொன்று மாத்திரமே. அது மொத்தச் செலவில் 10 சதவீத அளவாகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | அதிகாரசபையின் பணிப்பொறுப்பாகிய பெருந்தோட்ட பிராந்தியத்தின் அபிவிருத்தி இலக்காகக் கொண்ட செய்பணிகளுக்காக அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள செலவு விடயமொன்றில் அல்லது நேரடி ஏற்பாடுகள் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அதிகாரசபையின் மூலம் ஏற்பட்டிருந்த அபிவிருத்தி அலுவல்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு குறிப்பிட்ட ஏற்பாடு ஒதுக்கப்பட்ட நிறுவனத்தின் செலவுத் தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதிகாரசபைக்கு நேரடியாக அபிவிருத்தி அலுவல்களுக்காக செலவு விடயங்கள் ஒதுக்கப்பட்டிருக்காமை அல்லது ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமை காரணமாக இந்தச் சிக்கல் ஏற்பட்டிருந்ததெனவும், அது அதிகாரசபையின் செயலாற்றுகைக்கு நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென குறிப்பிட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அதிகாரசபைக்கு சாட்டப்பட்டுள்ள கருமங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அமைச்சினால் பல்வேறு திட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற வீடுகளுக்காக உறுதிகள் வழங்குதல் அதிகாரசபையினால் நிறைவேற்றப்படுவதுடன், அமைச்சினால் 2019 ஆண்டு முதல் 2025 ஆண்டு வரை இந்திய உதவி வீடமைப்புச் செயற்திட்டங்கள், இலங்கை அரசாங்கத்தின் கடனுதவியின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் இடர் வீடமைப்புச் செயற்திட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த வீடுகள் தொடர்பான தகவல் உறுதிகள் வழங்குவதற்காக அதிகாரசபைக்கு | இணங்குகின்றேன். | அமைச்சுடன் ஒன்றிணைந்து குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் காணப்படுகின்ற வீடுகளில் சட்டரீதியான வதிவோர்களுக்கு அந்த வீடுகளின் உரிமை வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2016 மற்றும் 2023 ஆண்டிடுகளின் போது இந்த உதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 4,000 வீடுகள் மற்றும் 1,300 வீடுகளின் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளுக்காக உரித்துறுதிகள் வழங்குவதற்காக தேவையான வசதிகள் வழங்குதல் 2024 ஆண்டில் அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், மாத்தளை, நுவரெலிய, பதுளை மற்றும் கண்டி ஆகிய 04 மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 1081 வீடுகளுக்காக உறுதிகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2025 செப்தம்பர் 10 திகதி அளவிலும் 737 உறுதிகள் மாத்திரம் வினியோகிக்கப்பட்டிருந்தது. | உறுதிகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2024 செப்தம்பர் முதல் நவம்பர் வரை தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்தமையால், தேர்தல் சுற்றறிக்கைக்கு இணங்க காணி உறுதிகள் வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதன் காரணமாக இந்த தாமதம் ஏற்பட்டிருந்தது. | தயாரிக்கப்பட்ட உறுதிகள் தாமதமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கண்டி மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 47 வீடுகளின் நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், நில அளவைப் படங்களில் குறைபாடுகள் காணப்பட்டமையால், உரித்துறுதி வழங்க முடியாமல் போனது. மேலும், பதுளை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 234 வீடுகளின் உரித்துறுதிகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை வினியோகிப்பதற்கு 2025 செப்தம்பர் 10 திகதி வரை நடவடிக்கை நடவடிக்கை எடுத்திருக்காததுடன், லயின் அறைகளை திருப்பி ஒப்படைக்காமையால், 44 உரித்துறுதிகளும், உறுதிகளை பெற்றுக்கொள்ள வராமையால் 19 உரித்துறுதிகளும் அதிகாரசபையின் பொறுப்பில் மேலும் காணப்பட்டது. | கண்டி மாவட்டத்தில் 47 உறுதிகளின் நில அளவைப் படங்களின் குறைபாடுகள் சரி செய்யப்பட்டு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 2024 ஆகஸ்ட் மாதம் சனாதிபதித் தேர்தல் மற்றும் அதன் பின்னர் பொதுத் தேர்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டமையால் உறுதிகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், பதுளை மாவட்டத்தில் 234 உறுதிகளை வினியோகிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்களில் அதிகாரசபையினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள உறுதிகளை அவற்றை வழங்குவதற்கு தேவையான ஆரம்ப தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்ட பின்னர் வழங்கப்படவுள்ளது. | நில அளவைப் படங்களில் குறைபாடுகளை சரி செய்து நிச்சயிக்கப்பட்ட விவரக் குறிப்புக்களை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு உறுதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | அரசாங்க ஏற்பாடுகளின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளுக்காக அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட கிரயத்தின் ஒரு பகுதி காணி உரிமையாளர்களிடம் அறவீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அமைச்சினால் அந்தக் கடனை செலுத்தி முடித்திருந்த உரிமையாளர்கள் தொடர்பாக | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு அமைச்சினால் அதிகாரசபைக்கு தகவல்கள் வழங்குவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை தவிர்ந்துகொள்வதற்காக அதிகாரசபையினால் குறிப்பிட்ட தரவு கணிப்பீடு நடாத்தி உச்சமட்ட அளவில் | வீடுகளுக்காக உரித்துறுதி வழங்கும் செய்முறை குறிப்பிட்ட நாட்களில் பூர்த்தி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தகவல்கள் அதிகாரசபைக்கு வழங்கப்படாமையால், அதிகாரசபையினால் அரச ஏற்பாடுகளின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளுக்காக உறுதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளுக்கான உரித்துறுதி வழங்குவதற்கு தேவையான தகவல்கள் அதிகாரசபைக்கு கிடைத்திருக்காமையால் போலவே, தோட்ட அதிகாரிகளினால் அந்தக் காணிப் பகுதிகளை விடுவிப்பதற்கு விருப்பமின்மை, நிர்மாணிக்கப்பட்ட வீடுகளுக்குரிய காணியை ஒதுக்கும் போது செய்முறைசார் சிக்கல்கள் காரணமாக இந்தச் செய்முறை தாமதமடைந்திருந்தது. | நிறைவேற்றிக்கொள்வதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதுடன், அதற்காக தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவளம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதன்படி, எதிர் காலத்தில் அந்த சிக்கலை தவிர்த்துக்கொள்ள முடியுமாகும். | |
| (ஊ) | பெயரிடப்பட்ட பிரதேசங்களின் தோட்டத்துறையில் காணப்படும் இளைஞர் சமூகத்திற்கு அவர்களின் கல்விசார் அபிவிருத்திற்காக மூன்றாவது மட்ட உயர் கல்வி நிறுவனங்களுக்கு நுழைவதற்கு உதவி வழங்கல் அதிகாரசபையின் ஒரு கருமமாக காணப்பட்ட போதிலும், 2024 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அது தொடர்பான தொழிற்பாடுகள் உட்படுத்தியிருக்காததுடன், 2023 ஆண்டில் மாத்திரம் அந்தக் கருமங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தது. | அதிகாரசபைக்காக அபிவிருத்தி செலவு விடயமொன்று ஒதுக்கப்பட்டிருக்காமையால் அதிகாரசபையின் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு ஏற்பாடுகள் வழங்கும் நிறுவனங்களின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் நடைபெறுகின்றது. எனினும், 2024 ஆண்டில் அமைச்சினால் அதற்காக முக்கியத்துவம் வழங்கி ஏற்பாடுகள் ஒதுக்கியிருக்காமையால், 2024 ஆண்டிற்காக அதன் செயற்பாடுகள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையின் பணிப்பொறுப்புக்கள், செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தி அந்த இலக்குகளை நெருங்குவதற்கு நடவடிக்கை வேண்டும். |
| (எ) | 2018 ஒக்தோபர் 04 திகதிய 2018 இன் 32 இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை நிறுவப்பட்டுள்ளதுடன், சட்டத்தின் 06 ஆவது பிரிவின் படி அதிகாரசபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்கள் அடங்கக்கூடியவாறு நிறுவனத்தின் தொழிற்பாடுகள் மற்றும் அலுவல்கள் திட்டமிடப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | 28 உத்தியோகத்தர்கள் அடங்கிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளுக்காக தேவையான ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையை அங்கீகரித்துக்கொள்வதற்காக அதிகாரசபையினல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்காக சந்தர்ப்பமொன்று வழங்கப்படாமையும், அபிவிருத்தி அலுவல்கள் | சட்டத்தின் மூலம் அதிகாரசபைக்கு சாட்டப்பட்டுள்ள கருமங்களை நிறைவேற்றுவதற்குரிய கருமங்களை திட்டமிட்டு அதன்படி செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நிறைவேற்றுவதற்காக ஏற்பாடுகள் வழங்கப்படாமையின் காரணத்தினால் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் நிறைவேற்ற முடியாமல் போனதென்பதை ஏற்றுக்கொள்கின்றேன். | |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| DMS/1849 இலக்கம் கொண்ட 2019 ஆகஸ்ட் 15 திகதிய கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக 28 நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 திகதி அளவில் அதிகாரசபையின் 03 பதவிகளுக்காக 04 நியமனங்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஏனைய 08 பதவியணி உத்தியோகத்தர்களுக்காக பதில் கடமை, ஒப்பந்தம் மற்றும் இடைநிலை அடிப்படயில் கடமையாற்றுகின்றார் என அவதானிக்கப்பட்டது. இதன்படி, அத் தினத்தில் உள்ளவாறு நிறுவனத்தில் 16 வெற்றிடங்கள் காணப்பட்டது. 2025 ஆகஸ்ட் 31 திகதி அளவில் பதவியணியினர் 10 வரை குறைந்த இந்த நிலைமை மேலும் சீரற்ற நிலைமை அடைந்திருந்தமையால் நிறுவனத்தின் எதிர்பார்த்த குறிக்கோள்கள் மற்றும் கருமங்கள் நிறைவேற்றுவதில் பிரதிகூலமான தாக்கத்தை ஏற்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக நீண்ட காலமாக குறிப்பிட்ட பிரிவுகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு முயற்சி செய்த போதிலும், பெறுபேறு ஏதும் கிடைக்கப் பெறாமையால் அதிகாரசபையின் எதிர்பார்த்த கருமங்களை நிறைவேற்றுவதில் முக்கியத்துவம் என கணித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் தற்காலிக நடவடிக்கையாக அவசியமான ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | அங்கீகரிக்கப்பட்ட நிலையான பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரச தொழில் முயற்சிகளின் நிறுவனம்சார் கட்டுப்பாட்டிற்கான வழிகாட்டல் கோவையின் பிரிவு 2.3 பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீட்டுடன் தயாரிக்கப்பட்ட மூலோபாயத் திட்டம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் செயலாளர் வரிசையமைச்சு, பணிப்பாளர் நாயகம் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2021 – 2025 ஆண்டுகளுக்கான மூலோபாயத் திட்டம் குறிப்பிட்ட தரப்பினருக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும், வர்த்தக சுற்றுச்சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்களின் படி ஒவ்வொரு ஆண்டிற்குரிய திருத்தங்களும் உட்படுத்தப்பட்டு கூட்டிணைந்த திட்டங்கள் தயாரிக்கப்பட்டு உரிய ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் திறைச்சேரிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், குறிப்பிட்ட கூட்டிணைந்த திட்டம் திருத்தம் செய்யப்பட்டு சமர்பித்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். 2021 – 2025 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 2021 ஆண்டிற்குரிய தொழிற்பாடுகள் நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்காமையால் மற்றும் அந்தக் கருமங்களை செயற்படுத்துவதற்காக பதவியணியினர் காணப்படாமையால் அவ்வாறு நாளதுவரை ஆக்கல் மேற்கொள்ளல் செய்முறை ரீதியாக மேற்கொள்ளப்படாமையால், கூட்டிணைந்த திட்டம் சுழற்சி முறையில் செயற்படுத்துவதற்கு சந்தர்ப்பமொன்று ஏற்படவில்லை. கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு 2024 ஆண்டிற்கு முன்வரக்கூடிய காலத்திற்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் இந்தத் திட்டம் கணக்காண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஆதிகாரசபையினால் 2021 – 2025 ஆண்டுகள் அடங்கக்கூடியவாறு தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தில் 2018 இன் 32 இலக்கம் கொண்ட பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் பந்தி 04 பிரகாரம் அதிகாரசபைக் குறிக்கோள்கள் மற்றும் சட்டத்தின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரசபையின் கருமங்கள் அடங்கக் கூடியவாறு மற்றும் அந்தக் கருமங்களை நிறைவேற்றுவதற்காக எடுக்கப்படுகின்ற உபாயங்கள், | 2021 – 2025 ஆண்டுகளுக்குரிய கூட்டிணைந்த திட்டம் 2020 ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிருந்தது. 2021 ஆண்டளவில் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் ஒருவர் மற்றும் 02 பட்டதாரி பயிலுனர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்தனர். அதன் காரணமாக நிறுவனத்தின் பணிப்பொறுப்புகள் மற்றும் நிறுவனத்தில் காணப்படும் சாத்தியக்கூறுகள், பலவீனங்கள், சந்தர்ப்பங்கள் மற்றும் | அதிகாரசபையின் குறிக்கோள்கள் மற்றும் கருமங்கள் அடங்கக்கூடியவாறு கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வலுக்கள், பலவீனங்கள், சந்தர்ப்பங்கள் மற்றும் சவால்களை பகுப்பாய்வு செய்து தயாரித்திருக்காததுடன், அது முழுமையற்ற கூட்டிணைந்த திட்டமொன்றென அவதானிக்கப்பட்டது. | சவால்கள் இனங்கண்டு அவற்றிற்குரிய மூலோபாய நுழைவுகளை உட்படுத்தி பகுப்பாய்வு ரீதியாக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிப்பதற்கு செய்முறை சாத்தியமான சந்தர்ப்பமொன்று கிடைத்திருக்கவில்லை என தோன்றியிருந்த போதிலும், அதிகாரசபையினால் தற்போது (2025 - 2029) ஆண்டுகளுக்கான இவ்வாறான பகுப்பாய்வொன்றினைக் கொண்ட கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

## 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரச தொழில் முயற்சிகளின் நிறுவனம்சார் கட்டுப்பாட்டிற்கான வழிகாட்டல் கோவையின் பிரிவு 2.3 பிரகாரம் அதிகாரசபையினால் நிறுவனத்தின் குறிக்கோள்கள் மற்றும் கருமங்கள் அடங்கக்கூடியவாறு செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகாரசபையினால் 2024 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் பெருந்தோட்ட சமூகத்திற்காக உரித்துறுதி வழங்குதல் மற்றும் தோட்ட வீடுகள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளல் ஆகிய கருமங்கள் தவிர சட்டத்தின் வேறேதும் கருமங்கள் அடங்கக்கூடியவாறு அந்தத் திட்டம் தயாரித்திருக்கவில்லை. | அதிகாரசபையினால் எதிர்பார்த்த பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 2024 ஆண்டின் போது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது சனாதிபதி செயலகச் செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 22.4 மில்லியன் தொகை மற்றும் வீடுகள் தொகை மதிப்புகளுக்காக அமைச்சினால் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2 மில்லியன் தொகை மாத்திரம் காணப்பட்டமையால், செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு உட்படுத்தியிருந்தது அந்த 02 கருமங்கள் மாத்திரமே. | அதிகாரசபையின் குறிக்கோள்கள் மற்றும் கருமங்கள் அடங்கக்கூடியவாறு செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2014 பெப்ரவரி 14 திகதி 01/2014 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் படி வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட வேண்டிய குறிப்பிட்ட | 2024 ஆண்டிற்காக நிறுவனத்திற்கான அமைப்புக் கட்டமைப்பு, பாதீடு, அங்கீகரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் செயற்படுத்தப்படும் காலச் | சுற்றறிக்கையின் படி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிற்கான நாளதுவரை ஆக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது காணப்படும் பதவியணி தொடர்பான விபரங்கள், ஆண்டிற்கான பாதீடு, ஆண்டின் போது வருடாந்த பாதீட்டின் அடிப்படையில் முக்கியத்துவத்தின் படி தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம், செயற்படுத்தப்பட்ட கால சட்டகம் மற்றும் தொழிற்பாடுகளில் எதிர்பார்த்த வெளியீடுகள் / விளைவுகள், பிரதான பெறுகைகள் தொடர்பான வருடாந்த ஏற்பாடுகளுக்கான கட்டுநிதித் தேவைப்பாட்டுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் ஆகியவை அடங்கக்கூடியவாறு 2024 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டகம் மற்றும் தொழிற்பாடுகள் மூலம் எதிர்பார்த்த வெளியீடுகள் மற்றும் கட்டுநதித் தேவைப்பாட்டுத் திட்டம் என்பன காணப்படுகின்றன. எனினும், அதிகாரசபைக்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று காணப்படாமையால் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுக் குழுவின் மூலம் அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. அமைச்சின் கணக்காய்வுத் திட்டத்தின் மூலம் இந்தக் கருமம் அணவல் செய்யப்படுகின்றது. | |
| (இ) | 2024 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி வீடுகளின் தொகை மதிப்பீடொன்று மேற்கொள்வதற்குரிய 04 தொழிற்பாடுகள் இனங்காணப்பட்டிருந்தது. 07 மாவட்டங்களுக்குரிய 12,000 நலன் பெறுவோர் குடும்பங்களின் தரவுகளை சேகரிப்பதற்காக எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2024 திசெம்பர் 31 திகதி அளவில் தரவுகள் சேகரிக்கும் படிவம் மற்றும் தரவுகள் சேகரித்தல் தொடர்பான கேகாலை, மாத்தறை, கழுத்துறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. அதன்படி, குறிப்பிட்ட கருமங்களின் பௌதீக முன்னேற்றம் 10 சதவீதமாக காணப்பட்டதுடன், எதிர்பார்த்த இலக்குகளை நெருங்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்தத் தரவுக் கணிப்பீடு வீடுகள் பெற்றுக்கொண்டோர்களுக்கான உறுதிகள் தயாரித்தல் செயற்பட்ட போதிலும், அதற்காக பொது மக்களை அறிவுறுத்துவதற்கு தோட்டங்களுக்கு செல்வதற்கு நேரிடுகின்றது. அந்தக் காலப் பகுதியில் தேர்தல் அறிக்கப்பட்டிருந்தமையால், தேர்தல் சுற்றறிக்கைகளுக்கு இணங்க செயற்திட்டங்கள் செயற்படுத்துவதை தாமதமடையச் செய்வதற்கு நேரிட்டிருந்ததுடன், அந்த ஏற்பாடுகளை எதிர்பாரத்தவாறு பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பமொன்று கிடைக்கவில்லை. எவ்வாறாயினும், 2024 திசெம்பர் முதல் அந்தக் கருமத்தை மீண்டும் ஆரம்பித்து 2025 செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தி செயற்படுத்தப்படும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.3 கணக்காய்வுக் குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரச தொழில் முயற்சிகளின் நிறுவனம்சார் கட்டுப்பாட்டிற்கான வழிகாட்டலின் பிரிவு 4.2 பிரகாரம் அதிகாரசபையினால் குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்துதல் மேற்கொள்ளப்படல் வேண்டியிருந்த போதிலும், 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போதும், 2025 ஜனவரி 01 திகதி முதல் 2025 ஆகஸ்ட் 31 திகதி வரை எதுவித கூட்டமும் நடாத்துதவதற்கு அதிகாரசபைக்கு இயலாமல் போயுள்ளது. | அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்று அல்லது அதிகாரசபையிடம் கணக்காய்வு உத்தியோகத்தர் காணப்படாமையால் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினூடாக அந்தக் கருமத்தை நிறைவேற்றுவதற்கு அமைச்சுச் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அமைச்சினால் காலாண்டு ரீதியாக நடாத்தப்படுகின்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களுடாக உரிய கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் இந்த அதிகாரசபை உட்படுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் படி ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.4 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 2030 அளவில் தனது அமைப்புக்குரிய அனைத்து நாடுகளினதும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு வழங்குதலை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் அறிமுகப்படுத்தியிருந்ததுடன், அதற்கு பொருந்தக்கூடியவாறு எதிர்பாரத்த குறிக்கோள்கள் இனங்காண வேண்டும். அதிகாரசபையினால் எதிர்பார்த்த குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் சுட்டிகள் இனங்கண்டிருக்காததுடன், அந்தக் குறிக்கோள்களை நெருங்குவதற்காக சரியான தரவுகள் | அதிகாரசபைக்கு சாட்டப்பட்டிருந்த பணிப்பொறுப்புக்கள் மற்றும் குறிக்கோள்களின் படி தோட்ட மக்களின் வறுமையொழித்தல் ஆரம்ப நிலைபேறான இலக்கு என அதிகாரசபை இனங்கண்டிருந்தது. தோட்டப் பகுதியின் வறுமை மற்றும் அதனொடு இணைந்துள்ள பிரதான காரணிகளாக குடும்ப வருமானம் குறைவடைதல் அல்லது போதிய வசதிகளுடனான வதிவிடங்கள் காணப்படாமை சாதகமாக இருந்தமையால், அது தொடர்பாக இலக்குகள் | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு பொருந்தக்கூடியவாறு எதிர்பார்த்த குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் சுட்டிகளை இனங்கண்டு செயற்படுத்த வேண்டும். |

பெற்றுக்கொள்ளல் மற்றும் பௌதீக வளங்கலை முகாமைத்துவம் செய்யும் செய்முறையொன்று அறுதியாக இனங்கண்டு அவற்றை செயற்படுத்துவதற்கு கடந்த 05 வருட காலப்பகுதியில் முடியாமல் போயிருந்தது.

தயாரிப்பதற்கு தேவையான தரவுகள் (basic line) பெற்றுக்கொள்ளல் அதிகாரசபையினால் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதிகாரசபையினால் எதிர்பார்க்கப்பட்ட அலுவல்களை நிறைவேற்றுவதற்காக குறைந்த பதவியணியொன்று அல்லது நிதி ஏற்பாடுகள் செலுத்தியிருக்காமை இந்த செய்முறை தாமதமடைவதற்கான காரணமாக இருந்தது. நிதி ஏற்பாடுகள் வெளித் தரப்பினர்களினூடாக பெற்றுக்கொள்வதற்கு செயற்படுத்தக்கூடியதாக இருப்பதனால் தேவையான மனிதவளம் பெற்றுக்கொள்வதற்கும் அங்கீகாரம் கிடைக்கப் பெறின் இந்தத் தாமதத்தை தவிர்த்துக்கொள்ள இயலும் என குறிப்பிடுகின்றேன்.